DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 15 |
| Name | : | **மருத்துவர். நவீன்குமார்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1வது எதிரி சிறையில் உள்ளார். 3 வது எதிரி ஆஜர். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுரை வேலம்மாள் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 26.01.2024 ம் தேதியன்று சுமார் 12.30 மணியளவில் 14 வயது மதிக்கத்தக்க பெண் குழந்தை ஜெர்லின் த.பெ.ஜேக்கப் ஜெயபாரி என்பவர் தனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை அன்றைய தினம் அடையாளம் தெரியாத நபரால் தாக்கியதில் தலையில் காயம் ஏற்பட்டதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடன் இல்லை. ஜெர்லினுக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

2. 1) வலதுபுறம் முன்பக்க தலைபகுதியில் எலும்பு முறிவு காணப்பட்டது. 2) வலதுபுறம் Temporal Bone -ல் எலும்பு முறிவு காணப்பட்டது. மேற்படி எலும்பு முறிவுகள் எலும்பு அமுங்கிய நிலையில் காணப்பட்டது. 3)மூளையில் வலுதுபுறம் ரத்தக்கசிவு காணப்பட்டது. 4) வலதுபுறம் உள்காதில் ரத்தக்கசிவு காணப்பட்டது. 5) மூளையில் உள்ள ரத்தக்கசிவினால் மூளையில் வீக்கமடைந்திருந்தது. 6) வலதுபுற கண்ணில் கொடுங்காயங்கள் இருந்தது. ஜெர்லின் என்பவருக்கு எங்களது மருத்துவமனையில் உள்ள மருத்துவரால் நுண்கதிர் படம் மற்றும் சிடி ஸ்கேன் பார்க்கப்பட்டது. அவருக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் எண்.2041260203 ஆகும். ஜெர்லினுடைய **நுண்கதிர் படம் அ.த.சா.ஆ.14** ஆகும். அவருக்கு எடுக்கப்பட்ட **சிடி ஸ்கேன் அறிக்கை மற்றும் குறுந்தகடு** (CD) **அ.த.சா.ஆ.15** ஆகும். அவருக்கு மூளையில் ஏற்பட்ட ரத்தக்கசிவு மற்றும் நெற்றி, வலதுபுற கண்ணில் ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் கொடுங்காயங்கள் என்று நான் வழங்கிய **காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.16** ஆகும்.

3. அதே சம்பவத்தில் காயம்பட்ட 67 வயது மதிக்கத்தக்க ஆண் சின்னப்பன் த.பெ.சவரிமுத்து என்பவர் அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக எங்கள் மருத்துவமனைக்கு 26.01.2024 அன்று மதியம் 12.30 மணியளவில் அழைத்து வரப்பட்டார். அவருக்கு கீழே கண்ட காயங்கள் காணப்பட்டது. 1) தலையின் இருபுறத்தில் உள்ள மண்டை ஓடுகள் உடைந்து அமுங்கிய நிலையில் காணப்பட்டன. 2) இடதுபுற மூளையில் ரத்தக்கசிவு காணப்பட்டது. 3) முக எலும்புகள் அனைத்தும் முறிந்து காணப்பட்டது. 4) மூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டிருந்ததால் மூளை 6mm வீக்கமடைந்திருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக அவரது மூளை, தண்டுவட பகுதிக்கு சிடி ஸ்கேன் மற்றும் நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது.

4. தற்போது காட்டப்படும் நுண்கதிர் படம் எங்கள் மருத்துவமனையில் எடுக்கப்பட்டது தான். **நுண்கதிர் படம் (3 எண்ணிக்கை) அ.த.சா.ஆ.17** ஆகும். **சிடி ஸ்கேன் அறிக்கை மற்றும் குறுந்தகடு (2) அ.த.சா.ஆ.18** ஆகும். சின்னப்பனுக்கு ஏற்பட்ட தலைக்காயங்கள், முக எலும்பு முறிவு, இடது புற

தலைக்காயங்கள் மற்றும் மூளையில் ஏற்பட்ட ரத்தக்கசிவு அனைத்தும் கொடுங்காயங்கள் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய **காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.19** ஆகும். அவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து 05.02.2024 ம் தேதி விடுவிக்கப்பட்டார்.

5) அதே சம்பவத்தில் காயம்பட்ட 60 வயது மதிக்கத்தக்க பெண் உபகாரமேரி க.பெ. சின்னப்பன் என்பவர் எங்கள் மருத்துவமனைக்கு 26.01.2024 ம் தேதி மதியம் 12.30 மணிக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். நான் அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு 1) வலதுபுற மூளையில் ரத்தக்கசிவு காணப்பட்டது. 2) Left Temporal Scalp பகுதியில் ஏற்கனவே தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது. 3) மூளையில் இன்னும் சில ரத்தக்கசிவுகள் காணப்பட்டது.

6. உபகாரமேரிக்கு தலையில் ஏற்பட்ட காயங்களுக்காக எங்கள் மருத்துவமனையில் நுண்கதிர் படம் மற்றும் சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது. அவருக்கு எடுக்கப்பட்ட **நுண்கதிர் படம் (6 எண்ணிக்கை) அ.த.சா.ஆ.20** ஆகும். **சிடி ஸ்கேன் அறிக்கை மற்றும் குறுந்தகடு (2) அ.த.சா.ஆ.21** ஆகும். அவருக்கு ஏற்பட்ட தலைக்காயங்கள் மற்றும் மூளையில் ஏற்பட்ட ரத்தக்கசிவு அனைத்தும் கொடுங்காயங்கள் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய **காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.22** ஆகும். அவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து 05.02.2024 ம் தேதி விடுவிக்கப்பட்டார்.

7. மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த எங்களது மருத்துவமனையில் பணிபுரிந்த மருத்துவர் அமரேஷ்வரர் ரெட்டி தற்போது எங்கள் மருத்துவமனையிலிருந்து விலகி தற்போது எங்கு இருக்கிறார் என்று தெரியவில்லை. எனவே எங்களது மருத்துவமனையிலிருந்து கொடுக்கப்பட்ட கடிதத்தின் படி மருத்துவர் அமரேஷ்வரர் ரெட்டி சிகிச்சை அளித்த நபர்களுக்கு நான் மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். எங்கள் மருத்துவமனையிலிருந்து மருத்துவர் அமரேஷ்வரர் ரெட்டி என்பவர் சார்பாக நான் **சாட்சியம் அளிக்க கொடுக்கப்பட்ட கடிதம் அ.த.சா.ஆ.23**

ஆகும்.

8. மருத்துவர் அமரேஷ்வரர் ரெட்டியுடன் நான் பணிபுரிந்த வகையில் அவரது கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். மருத்துவர் அமரேஷ்வரர் ரெட்டி 26.01.2024 ம் தேதி எங்களது மருத்துவமனையில் பணியிலிருந்த போது 35 வயது மதிக்கத்தக்க பெண் வேதபோதக அரசி க.பெ. ஜேக்கப் ஜெயபாரி என்பவர் தனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு எங்களது மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்தார். அவரை பரிசோதனை செய்தபோது தான் காளையார்கோவிலில் தனது வீட்டிலிருந்தபோது அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கியதில் காயம்பட்டதாக தெரிவித்துள்ளார்.

9. வேதபோதக அரசிக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டது. 1) தலையில் ஏற்கனவே தையலிடப்பட்ட காயங்கள் காணப்பட்டது. 2) வலதுபுறம், இடதுபுறம் தையலிடப்பட்ட காயங்கள் காணப்பட்டது. 3) வலது கை நடுவிரலில் 2, 3 விரல்களில் வீக்கம் மற்றும் எலும்பு முறிவு காணப்பட்டது. 4) இடதுகை நடுவிரல் முன்பகுதியில் விரல் துண்டிக்கப்பட்டிருந்தது. 5) இடது கை மோதிரவிரலில் எலும்பு முறிவு காணப்பட்டது. 6) முகத்தில் முகவாதம் ஏற்பட்டிருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக எங்கள் மருத்துவமனையில் நுண்கதிர் படம் இடது கை நடுவிரல், மோதிரவிரல் ஆகியவற்றுக்கும் வலது கை நடுவிரல், மோதிரவிரல் ஆகியவற்றிற்கு எடுக்கப்பட்டது.

10. வேதபோதக அரசிக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் எண்.2401260211 ஆகும். அவருக்கு எடுக்கப்பட்ட **நுண்கதிர் படம் (2 எண்ணிக்கை) அ.த.சா.ஆ.24** ஆகும். அவருக்கு எடுக்கப்பட்ட **சிடி ஸ்கேன் அறிக்கை மற்றும் குறுந்தகடு (2) அ.த.சா.ஆ.25** ஆகும். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் கொடுங்காயங்கள் என்று கருத்து தெரிவித்து மருத்துவர் அமரேஷ்வரர் ரெட்டி வழங்கிய **காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.26** ஆகும். அவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து 05.02.2024 ம் தேதி விடுவிக்கப்பட்டார். அவருக்கு தலை மற்றும் மூளையில் ஏற்பட்ட காயங்களுக்காக எடுக்கப்பட்ட **நுண்கதிர் படம் (6 எண்ணிக்கை)**

**அ.த.சா.ஆ.27** ஆகும்.

11. அதே சம்பவத்தில் காயம்பட்ட 10 வயது சிறுவன் ஜோபின் த.பெ.ஜேக்கப் ஜெயபாரி என்பவருக்கு எங்களது மருத்துவமனையில் 26.01.2024 ம் தேதி மதியம் 12.30 மணியளவில் மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டு மருத்துவர் அமரேஷ்வரர் ரெட்டி என்பவரால் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அவர் தன்னை அடையாளம் தெரியாத நபர் தலையில் தாக்கியதில் காயம்பட்டதாக தெரிவித்தார். தாக்கிய ஆயுதம் தனக்கு தெரியவில்லை என்று தெரிவித்தார்.

12. ஜோபினை பரிசோதனை செய்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1) ஏற்கனவே தையலிடப்பட்ட நான்கு தலைக்காயங்கள் காணப்பட்டது. 2) அவரது வலதுபுற தலையின் பின்புறம் (Right Parietal) எலும்பு முறிவு காணப்பட்டது. 3) தலையின் வலதுபுறத்தில் ரத்தக்கசிவு 5.1 x 1.3cm அளவில் காணப்பட்டது. 4) மண்டை ஓட்டின் அடிப்பகுதியில் (Occipital) எலும்பு முறிவு காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக எங்களது மருத்துவமனையில் எடுக்கப்பட்ட **நுண்கதிர் படம் (4 எண்ணிக்கை) அ.த.சா.ஆ.28** ஆகும். அவருக்கு எடுக்கப்பட்ட **சிடி ஸ்கேன் அறிக்கை மற்றும் குறுந்தகடு (3) அ.த.சா.ஆ.29** ஆகும். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் கொடுங்காயங்கள் என்று கருத்து தெரிவித்து மருத்துவர் அமரேஷ்வரர் ரெட்டி வழங்கிய **காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.30** ஆகும். அவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து 03.02.2024 ம் தேதி விடுவிக்கப்பட்டார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.பொ.சா.3 கடப்பாரையால் காயம்பட்ட நபர்களை தாக்கும்போது மேற்படி காயங்கள் அனைத்தும் ஏற்பட வாய்ப்புள்ளது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. மேற்படி காயம்பட்ட மூன்று பேரையும் ஒரே நேரத்தில் வெவ்வேறு நபர்களால் வெவ்வேறு ஆயுதங்களால் தாக்கினால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. காயம்பட்டதாக சொன்ன நேரம் அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை முன்போ அல்லது பின்போ

வேறுபடலாம் என்றால் சரிதான். அ.த.பொ.சா.3 கடப்பாரையால் அடித்தால் சிதைவு காயமும் குத்தினால் குத்துக்காயமும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அ.த.பொ.சா.3 கடப்பாரையால் தாக்கினால் வெட்டுக்காயம் 2 செ.மீ அளவு தான் வரக்கூடும் என்றால் சரிதான். 2 செ.மீ மேல் நீளமான காயம் வேறு ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் இதே ஆயுதத்தாலும் ஏற்பட வாய்ப்புள்ளது.

2. பொதுவாக கம்பி போன்ற ஒரு ஆயுதத்தால் தாக்கினால் வெட்டுக்காயம் ஏற்படாது சிதைவு காயம் தான் ஏற்படும் என்றால் சரிதான். மருத்துவர் அமரேஷ்வரர் ரெட்டியுடன் நான் பணிபுரிந்துள்ளேனா என்றால் ஆமாம். மருத்துவர் அமரேஷ்வரர் ரெட்டி தற்போது தமிழ்நாட்டை விட்டு வெளிநாடு சென்றுள்ளாரா என்றால் இல்லை. மருத்துவர் அமரேஷ்வரர் ரெட்டி மருத்துவம் அளித்த மருத்துவ ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு அதிகாரம் அளித்துள்ளாரா என்றால் ஆமாம். மருத்துவர் அமரேஷ்வரர் ரெட்டி எனக்கு அவ்வாறு எந்த ஒரு அனுமதியும் அளிக்கவில்லை என்றும் நான் அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. நுண்கதிர் படங்கள் மற்றும் சிடி ஸ்கேன் ஆகியவற்றில் நான் நிபுணத்துவம் பெறவில்லை என்றால் சரிதான். நுண்கதிர் படங்கள் மற்றும் சிடி ஸ்கேன் நிபுணர்களின் சான்றுகளை நான் நீதிமன்றத்தில் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.12 17:47:35 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**